**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3226 /அ5/2020 நாள்.27.10.2021**

பொருள்: பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – இந்திய பள்ளிகளின் விளையாட்டு குழுமத்தால் அறிமுகபடுத்தப்பட்ட புதிய வகையான விளையாட்டுகள் – அனைத்துவகை அரசு / அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலைப்பள்ளிகள் – உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர்களுக்கான இரண்டு நாட்கள் புத்தாக்கப் பயிற்சி அளித்தல் – சார்பு

பார்வை: சென்னை, முதன்மைக் கல்வி ஆய்வாளரின் செயல்முறைகள் ந.க.எண்.055–6/ஆ1/2021–22 நாள்.25.10.2021

––––––

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க இந்திய பள்ளிகளின் விளையாட்டு குழுமத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வகையான விளையாட்டுகள் நடைமுறைபடுத்துதல் சார்பாக அனைத்துவகை அரசு / அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர்களுக்கு 28.10.2021 மற்றும் 29.10.2021 ஆகிய இரண்டு நாட்களில் புத்தாக்கப் பயிற்சி கீழ்குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் நடைபெற உள்ளதால், பயிற்சியில் உரிய நேரத்தில் கலந்து கொள்ள ஏதுவாக உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர்களை பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறும், இதற்கான உணவு மற்றும் பயணப்படியினை பள்ளி வளர்ச்சி நிதியிலிருந்து வழங்கிடவும் அனைத்துவகை அரசு / அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இடம்** : விஐடி பல்கலைக்கழகம், காட்பாடி (சி.எஸ் ஹால்)
**பயிற்சி நேரம்** : காலை 9.00 முதல் மாலை 5.30 மணி வரை

**முதன்மைக் கல்வி அலுவலர்**
**வேலூர்**

**பெறுநர் :**
அனைத்துவகை அரசு / அரசு உதவிபெறும் உயர்நிலை /
மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

**நகல்**
மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்,
வேலூர்